# நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

**2018 ஓகத்து 24** **நிதி குத்தகைக்குவிடும் சட்டப் பணிப்புரைகள்** **2018இன் 06ஆம் இலக்கம்**

---

**உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்**

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படுகிறது.

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது;

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதி குத்தகைவிடும் முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு; அத்துடன்

(iii) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தேச சலுகை அடிப்படையிலான குத்தகை வசதியின் கீழ் அரச பணியிலுள்ள கள அலுவலர்களுக்கும் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் உந்து ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு.

3.2 அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் உள்ளக வரையறைகளையும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

டபிள்யு. ரணவீரா
பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி